

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.9.2025) சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு.ச.உமா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகர காவல் ஆணையாளர் அனில் குமார் கிரி, காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முன்னாள் அமைச்சர் கோசி.மணி அவர்களின் 97 வது பிறந்த நாளை முன்னிட்டு குத்தாலம் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது சிலைக்கு பிறப்டுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட அரங்கில்

# அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சேலம், செப். 18 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.9.2025) சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், நலம் காக்கும் ஸ்டாலின், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அரசுக்கு நிச்சயம் ஒரு நல்ல பெயரை பெற்றுத் தரும் என்பதை மனதில் வைத்து, மனுக்களை கவனமாக கையாண்டு அரசுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் நற்பெயரை பெற்றுத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கின்றேன். சேலம் மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் திட்டமிட்டபடி பாதிக்கும் மேல் முடிவடைந்துள்ளது. 45 நாட்களுக்குள் மனுக்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதேபோல கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் அதிக மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை கவனமாக பரிசீலித்து அவற்றிற்கும் விரைவாக தீர்வு காண வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன்.

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தில் வாரத்திற்கு ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்களை நடத்தி மக்களுக்கு மருத்துவ சேவை கிடைப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

கலைஞர் விளையாட்டு உபகரணங்களை அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு உபகரணங்கள் கேட்பவர்களுக்கு வழங்கி அந்த பதிவேடுகளை பராமரித்து அந்த செயலியையும் சரியாகப் பயன்படுத்துமாறு நீங்கள் எல்லோரும் வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பூமாலை வணிக வளாகம் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஆட்சித் தலைவர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு முதல மைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய அரசு விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், காலை உணவுத் திட்டம் என பல முத்திரை திட்டங்களை தீட்டி மக்களிடம் ஒரு நற்பெயரை பெற்றுள்ளது.

அதேபோல குடிநீர், சாலை பராமரிப்பு, மின்விளக்கு போன்ற அடிப்படை தேவைகளை குறித்து மக்களுடைய கோரிக்கைகளை தாமதமின்றி தரமாக நிறைவேற்றி தருவது நாம் அனைவருடைய கடமை. இதை மனதில் வைத்து நீங்கள் எல்லோரும் செயல்பட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை கொண்டு சென்று சேர்ப்பவர்கள் வந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களாகிய நீங்கள் தான். அரசுக்கும் மக்களுக்குமான ஒரு பாலமாக இருந்து, நம்முடைய திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர்வதை உறுதி செய்வதை உங்களை எல்லாம் மீண்டும் கேட்டுக் கொண்டு, முதலமைச்சர் அவர்களுக்கு நற்பெயரை பெற்றுத் தருகின்ற பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு.ச.உமா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகர காவல் ஆணையாளர் அனில் குமார் கிரி, காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளிடம் மனு அளித்தனர். ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்கள் சரியான முறையில் பதிவேற்றம் செயல்படுகிறதா என்பது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் தூய்மை பணியாளர்களிடம் கலந்துரையாடினார். நிகழ்வில் ஊராட்சிகள் உதவி இயக்குனர் உமா சங்கர், பவானி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ) கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளர் கேப்டன் துரை, ஒன்றிய கழக துணை செயலாளர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கல்வி, மருத்துவ உதவி உள்ளிட்ட உதவிகளை பல்வேறு மாவட்டங்களை சார்ந்தவர்களுக்கு வழங்கினார். ஈரோடு வடக்கு மாவட்டம் கோபியை சேர்ந்த சை.அப்துல் சமதுக்கு மருத்துவ செலவிற்காக ஒரு 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினை ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் சை.சாகுல் சமது வீட்டிற்கு நேரில் சென்று காசோலையினை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம், ஒன்றிய கழக செயலாளர் சிறுவலூர் எஸ்.ஏ.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கொரடாச்சேரியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு ஊர்வலமாகச் சென்று மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அப்போது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாமில் கழகத்தில் இணைந்த பொதுமக்களுடன் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## பொதுமக்கள் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" உறுதிமொழி ஏற்றனர்!

*திருவாரூர், செப். 18 -*

தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருவாரூர் மாவட்டம் முழுவதும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாள் விழா, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு, கிளை கழகங்களில் எழுச்சியோடு நடைபெற்றது. கழகத்தினரும், பொதுமக்களும் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட் டோம்"உறுதிமொழியை ஏற்கும் நிகழ்வுகளை, மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கொரடாச்சேரியில் தொடங்கி வைத்தார்.

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா உள்ளிட்டோர் கழக நிர்வாகிகளுடன் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கொரடாச்சேரியில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு கழக தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி ஏற்றும், கமுகக்குடி ஊராட்சியில் ஒன்றிணையும் தமிழ்நாடு திட்டத்தில் கழகத்தில் இணைந்த பொதுமக்களுடன் "தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டோம்"உறுதிமொழியையும் ஏற்றனர்.

மேலும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த தினம் எழுச்சியோடு கொண்டாடப்பட்டது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 1194பூத்களிலும், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தங்கள் பகுதிகளில் "ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின்" கீழ் உறுப்பினராக இணைந்த பொது மக்களின் முன்னிலையில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் அவர்கள் வழிகாட்டுதலின்படி "தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" என்கிற உறுதிமொழியை அந்தந்த பகுதி பாக நிலை முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்றனர்.

மாவட்டம் முழுவதும் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் உறுதிமொழி ஏற்பு விழாக்களில் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன், கோ.தட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், ப.பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், புலிவலம் ஏ.தேவா, ப.பிரகாஷ், இரா.மனோகரன், வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, ஐ.வி.குமரேசன், நா.கவியரசு. கே.வி.கே. ஆனந்த் , ஆர்.பாலச்சந்திரன்,

சேகர் என்கிற கலியபெருமாள், நகர கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், வீரா.கணேசன், வாரை.எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பா சிவனேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி, ஆர்.ராஜசேகரன், பேரூர் செயலாளர்கள் பூண்டி கே கலைவேந்தன்,பேரளம் தியாகு , மற்றும் நகர்மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, தலைமை பொதுக்குழு, சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு கிளை கழங்களின் நிர்வாகிகள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள் ,பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியாரின் 147 வது பிறந்ததினத்தையொட்டி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு, மு.கார்த்திகேயன், சி.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பூபதி, சா சுப்பிரமணி, சந்திரன், அசோகன், லோகநாதன். பகுதிசெயலாளர்கள். தமிழரசன், சாந்தமூர்த்தி. கேபிள் ராஜா, கே.டி.ஆர். தனசேகரன், கே.ஜெய், ஜெகதீஸ், ஏ எஸ்.சரவணன், ஆர்.பி. முருகன், இப்ராகீம், சி.பிரகாஷ், மாநகர கழக நிர்வாகிகள் பா.ரகுபதி, கே.ஆர்.முருகன் கணேசன், ஷெரீப், மேயர் ஆ ராமச்சந்திரன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் தொண்டாமுத்தூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட துணைச் செயலாளர் ஜெயந்தி, மேட்டுப்பாளையம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அருண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிரமணியம், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் மணி சுந்தர், கல்விக்குழு தலைவர் மாலதி நாகராஜன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மு.ஜெயக்குமார் (மேட்டுப்பாளையம்), ராதா கிருஷ்ணன் (தொண்டாமுத்தூர்) உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலூர் வடக்கு ஒன்றியம், கணியூர் இந்திரா நகர் 65வது பூத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, "ஓரணியில் தமிழ்நாடு" தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்! என்று கூறி உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். இதில் ஒன்றிய கழக செயலாளர் சிபி.க.செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபு, கணியூர் ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் வேலுச்சாமி, முன்னாள் துணைத் தலைவர் ராஜ், பதுவம்பள்ளி ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் சரவணன், மாவட்ட பிரதிநிதி கோபால்சாமி, ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட தலைவர் சண்முகம், சுற்றுச்சூழல் அணி ஒன்றிய அமைப்பாளர் ஜீவானந்தம், கலங்கல் கிளைச் செயலாளர் சிவகுமார், கிருஷ்ணன், அல்லிமுத்து தெய்வசிகாமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.